**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்**

**O.S. 34/2023**

**வா.சா.2 - ஜூலியஸ்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 24.09.2025.**

**முதல் விசாரணை.**

நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் வாதி தரப்பில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது தந்தையின் பெயர் செல்லத்துரை நான் பிறந்து வளர்ந்த ஊர் வெள்ளையன் தோப்பு தற்போது வைத்தியநாதபுரத்தில் குடும்பத்துடன் தாமசித்து வருகிறேன். எனது தாயார் பெயர் செந்தமிழ் செல்வி. நேசபாண்டிய நாடாச்சி எனது பெரியம்மா. எனது தந்தையின் முதல் மனைவி ஆவார். எனது தந்தை எனது பெரியம்மா மற்றும் எனது தாய் அனைவரும் காலஞ்சென்ற விட்டனர். எனது உடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்ந்து ஐந்து பேர் இரண்டு பேர்கள் காலஞ்சென்று விட்டனர். எனது பெரியம்மா நேசபாண்டிய நாடாச்சிக்கு குழந்தைகள் இல்லை. நேசபாண்டிய நாடாச்சிக்கு வாரிசுகள் எனது தந்தை மற்றும் நாங்கள். வழக்கு பட்டிகை சொத்து குறித்து எனக்கு தெரியும். வழக்கு பட்டிகை சொத்து ஆதியில் எனது பெரியம்மா நேசபாண்டிய நாடாச்சிக்கு உரிமைப்பட்டிருந்தது.

எனது பெரியம்மா நேசபாண்டிய நாடாச்சி உயிருடன் இருக்கும் போதே வழக்கு பட்டிகை சொத்தை வெள்ளையன் தோப்பு நாராயணசுவாமி கோவிலுக்கு எழுதிவைத்துவிட்டார். தற்போது கோவிலின் கைவசம் மற்றும் அனுபவத்தில் தான் உள்ளது. வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண்.562/7. வழக்கு பட்டிகை சொத்தின் நான்கு பக்க எல்கைகள் கிழக்கு ரோடு, மேற்கு கோவிலின் சொத்து, வடக்கு கோவில் சொத்து, தெற்கு ரோடு. வழக்கு பட்டிகை சொத்தும் நாராயணசுவாமி கோவிலின் சொத்தும் ஒரே கிடப்பாக தான் உள்ளது. வழக்கு பட்டிகை சொத்தை சுற்றி வேலிபோட்டு வைத்திருக்கிறார்கள். எனது பெரியம்மா நேசபாண்டிய நாடாச்சியின் விருப்பத்தோடு தான் எனது தந்தை எனது தாயார் செந்தமிழ் செல்வியை திருமணம் செய்து கொண்டார். நேசபாண்டிய நாடாச்சிக்கு எனது தந்தை மற்றும் நாங்கள் மொத்தம் ஐந்து நபர்களை தவிர வேறு வாரிசுகள் கிடையாது.

நேசபாண்டிய நாடாச்சிக்கும் எனது தந்தைக்கும் விவாகரத்து ஆகவில்லை. வழக்கு பட்டிகை சொத்து நேசபாண்டிய நாடாச்சிக்கு பின்பு நாராயணசுவாமி கோவிலின் கைவசத்திற்கு வந்தது வேறு நபர்களின் கைவசத்திற்கு சென்றதாக எனக்கு தெரியவில்லை. வழக்கு பட்டிகை சொத்தில் ஒரு ஆஞ்சநேயர் கோவிலும் உள்ளது. மேற்படி

ஆஞ்சநேயர் கோவிலை பராமரித்து வருவது நாராயணசுவாமி கோவில் நிர்வாகம். சுமார் 20 ஆண்டுகளாக வழக்கு பட்டிகை சொத்தில் ஆஞ்சநேயர் கோவில் இருப்பதாக தெரியும். எனது தந்தையுடன் கோவிலுக்கு செல்லும் போது மேற்படி கோவிலில் ஆஞ்சநேயர் கோவில் இருப்பதை தெரியந்து கொண்டேன் மேலும் வழக்கு பட்டிகை சொத்தை நாராயணசுவாமி கோவிலுக்கு எனது பெரியம்மா எழுதிக்கொடுத்து விட்டார் அது குறித்து எவ்வித வழக்கு மற்றும் பிரச்சனைகள் வந்தாலும் அதனை பார்த்துக்கொள்ளும் படி எனது தந்தை அறிவுறுத்தினார். நாராயணசுவாமி கோவிலில் நாங்கள் உறுப்பினர் அல்ல. வழக்கு பட்டிகை சொத்தை பதிவு செய்து வாதி நாராயண சுவாமி திருக்கோவிலுக்கு கொடுப்பதற்கு வாரிசுகளான நாங்கள் தயாராக உள்ளோம்.

**முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**